# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண் 76 /2014**

திரு. சாகுல் ஹமீது,
திருமதி. ஹமீதா,
5, சுப்பிரமணி நகர்,
2வது தெரு, வளசரவாக்கம்,
சென்னை – 87 ..... மேல் முறையீட்டாளர்
(திரு. சாகுல் ஹமீது)

எதிர்

உதவி செயற் பொறியாளர்/விநியோகம்,
அண்ணா நகர்,
மதுரை மின்பகிர்மான வட்டம்/பெருநகரம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மதுரை 20 ....... எதிர்மனுதாரர்
(திரு. எம். சுப்பிரமணியன், உதவிசெயற்பொறியாளர்,
அண்ணா நகர்)

**கேட்புரை நாள் : 29–1–2015 & 3–3–2015**

**ஆணை நாள் : 28-4-2015**

திரு. சாகுல் ஹமீது மற்றும் திருமதி. ஹமீதா வளசரவாக்கம், சென்னை–87 அவர்களின் 25.11.2014 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.76 / 2014 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுவின் மீது மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை 29.1.2015 மற்றும் 3.3.2015 ஆகிய நாட்களில் நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், அவரின் எழுத்துப்பூர்வமான வாதுரை எதிர் மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் கேட்புரை நாளில் இருதரப்பினராலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின் குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளர்கள் தங்களுடைய தொழிற்சாலைக்கு மின் இணைப்பு கிடைத்திட தகுந்த ஆணை வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

## 2. வழக்கின் சுருக்கம்:

2.1 திரு. சாகுல் ஹமீது மற்றும் திருமதி. ஹமீதா ஆகிய இருவரும் கணவன் மனைவி. இருவரும் தங்களுடைய பெயரில் தொழிற்சாலைக்கான மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

2.2 அவர்கள் இருவரின் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட நாள் 7.6.2013. மேலும், மதிப்பீடு அனுமதி பெறப்பட்டு 28.6.2013 அன்று திரு. சாகுல் ஹமீது அவர்கள் ரூ.92,650/–ஐயும் திருமதி. ஹமீதா அவர்கள் ரூ.91,050/–ஐயும் மின் இணைப்புகள் பெறுவதற்காக வைப்பு தொகை, பிணை வைப்புத்தொகை(EMD), மேம்பாட்டு கட்டணம்(Development Charges), மின் இணைப்புக்கட்டணம்(Service Connection Charges) ஆகியவற்றிற்காக உரிமம்தாரரால் வசூல் செய்யப்பட்டுள்ளது.

2.3 இந்நிலையில் 19.9.2013 அன்று உதவி செயற்பொறியாளர், அண்ணா நகர் அவர்கள் மேல்முறையீட்டாளருக்கு அவருடைய ஆவணங்களில் உள்ள குறைகளையும் மின்பாதை விஸ்தரிப்பிற்கு நீதிமன்ற வழக்குகள் W.P.No.12755/86 & W.P.No.2544/89 தடையாக உள்ளது என்றும் தெரிவித்து அந்த இடத்தின் வருவாய் ஆவணங்கள் வரைபடத்துடன் 7 நாட்களில் சமர்ப்பிக்க கோரியுள்ளார்.

2.4 28.9.2013 நாளிட்ட கடிதத்தில் வருவாய் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததால் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ரத்து செய்யப்படுகின்றன என்ற அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

2.5 26.10.2013 அன்று, மேல்முறையீட்டாளர்கள் தங்களுடைய புதிய தொழிற்சாலைக்கு மின்சாரம் வேண்டி பதிவு செய்த விண்ணப்பம் மின்தடம் செல்லும் பாதை நீதிமன்ற வழக்கில் உள்ளதால் மனுதள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

கொடுக்கப்பட்டுள்ள ஒரு வார காலத்திற்குள் குறையை நிவர்த்தி செய்ய முடியாது என்பதினால் மேல்முறையீட்டாளர் அவர்கள் கட்டிய மின்வைப்பு தொகையை திரும்ப தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார். அவரது மேற்கண்ட மனு மேற்பார்வை பொறியாளரால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எனவே, மதுரை மின்பகிர்மான வட்டம்/பெருநகரத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனுதாரர் முறையீடு செய்துள்ளார்.

2.6 மன்றம் MCDஐ தவிர மற்ற கட்டணங்களை திரும்ப அளிக்க முடியாது என்றும், மேல்முறையீட்டாளர், புதிதாக வேறு விண்ணப்பம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகளை நிவர்த்தி பண்ணி சமர்ப்பிக்கவேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளது.

2.7 மேற்கண்ட ஆணையில் திருப்தியில்லாததால் மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின் குறைதீர்ப்பாளர் முன்பு சமர்ப்பித்துள்ளார்.

3. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>

3.1 மேல்முறையீட்டாளர்கள் இருவருக்கும் சொந்தமான சுமார் 22 1/2 சென்ட் இடம் மேற்படி முகவரியில் உள்ளது. அதில் பெரிய அளவிலான கட்டிடம் மற்றும் அலுவலகம் உள்ளது. மேற்படி இடத்தில் மெசர்ஸ் நாகூரார் பிளாஸ்டிக் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில் கழிவு பிளாஸ்டிக்பொருட்களை வாங்கி அதை சிறு துண்டுகளாக்கி பின் உருச் செய்யும் தொழில் செய்ய எண்ணி சிறு புதிய தொழிற்சாலை மின் இணைப்பு இரண்டு மேல்முறையீட்டளர்கள் இருவரின் பெயரில் கேட்டு அதை பெறுவதற்காக அவர்கள் இருவரும் கடந்த 7.6.2013 தேதியன்று இரண்டு விண்ணப்பங்களை (சட்டப்படி தேவையான ஆவணங்களுடன்) மதுரை 20 அண்ணாநகரில் உள்ள மின்பகிர்மான உதவி செயற்பொறியாளர் அவர்களிடம் வழங்கி இருந்தோம்.

3.2 அப்போதைய உதவி செயற்பொறியாளர் அவர்கள் முறையாக இருவரின் விண்ணப்ப மனுக்களை பரிசீலனை செய்து அதன்பின் சிறு புதிய தொழிற்சாலை மின் இணைப்பு பெறவிருக்கும் இடத்தையும் உரிய அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்த பின் இரண்டு மின் இணைப்பு கொடுக்க உத்திரவிட்டார்.

3.3 மேலும், மேற்படி உதவி செயற் பொறியாளரின் உத்திரவிற்கிணங்க Regn Fees, Caution deposit, Development charges, EMD for Industrial (SC) மற்றும் Service charges போன்ற வகையினங்களுக்காக மொத்தம் ரூ.92,650/– மட்டும் அவரது

பெயரில் முறையே 7.6.2013 மற்றும் 28.6.2013ஆகிய தேதிகளில் செலுத்தி ரசீதுகள் பெற்றுள்ளார். அதே போன்று மேற்கண்ட வகையினங்களுக்காக மொத்தம் ரூ.91,050/— மட்டும் அவரது மனைவி ஹமீதா பெயரில் அதே தேதிகளில் செலுத்தி ரசீதுகளும் பெற்றுள்ளார்.

3.4 அதற்குபின் சிறு புதிய தொழிற்சாலை வழங்குவதற்கான மின் உபகரணங்கள் அனைத்தும் அவர்களின் மேற்படி இடத்தில் மின் வாரிய அதிகாரிகளால் கொண்டுவந்து இறக்கி வைக்கப்பட்டது.

3.5 2013 அக்டோபர் மாத வாக்கில் மதுரை வந்த அவர் அண்ணா நகர் மின்பகிர்மான உதவி செயற்பொறியாளர் பொறுப்பில் திரு. எம். சுப்பிரமணியன் என்பவர் இருப்பது தெரியவந்தது. அவரிடம் மேல்முறையீட்டாளர்களின் புதிய மின் இணைப்பு விபரங்களை கூறி இன்னும் ஏன் மின் இணைப்பு வழங்காமல் இருக்கின்றீர்கள் என கேட்டதற்கு புதிய மின் இணைப்பு வழங்க இருக்கும் இடத்தை தான் ஆய்வு செய்ததாகவும் அதில் சில குறைபாடுகள் இருந்ததாகவும் அது குறித்து 19.9.2013 அன்று ஏழு நாள் கால அவகாசம் கொடுத்து அறிவிப்பு ஒன்று அவருக்கு அனுப்பியதாகவும் சொன்னார்.

3.6 உதவி செயற்பொறியாளர் அறிவிப்பு அனுப்பிய விபரம் அவருக்குத் தெரியாது. அதற்குக் காரணம் அச்சமயம் தொழில் விசயமாக வெளியூர் சென்றிருந்தார். மேலும் புதிய மின் இணைப்பு சம்மந்தப்பட்ட அவர்களின் மனுக்களையும் கேன்சல் செய்யப்பட்டு விட்டதாக கூறினார்.

3.7 அதற்கு அவர் மேற்படியாக இரண்டு மின் இணைப்புகள் பெற்று தொழில் செய்யும் பொருட்டு சுமார் ஒரு கோடி வரை முதலீடு செய்துள்ள விவரத்தையும் புதிய மின் இணைப்பு வழங்கவில்லை என்றால் பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படலாகும் என சொன்னார். அதற்கு அவர் ஏற்கனவே சேன்சல் செய்யப்பட்டு விட்ட காரணத்தினால் தாங்கள் செலுத்திய பணத்தை திரும்ப மனு எழுதிக் கொடுத்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்.

3.8 அவரின் கட்டளைக்கு கீழ்படிந்து மேல்முறையீட்டாளர்களால் வைப்பீடு செய்யப்பட்ட கட்டணங்களை திரும்ப பெறுவதற்கு மனு செய்த அவர்கள் மேற்படியான தொகைகளை இன்றுவரை திரும்பப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

3.9 தற்சமயமும் புதிய மின் தொழில் இணைப்புகள் பெற இரண்டு புதிய விண்ணப்பங்கள் கொடுக்க தயாராக உள்ளதாகவும் அவர்களின் மனுக்களை

கருணையுடன் பரிசீலனை செய்து புதிய மின் இணைப்பு வழங்க வேண்டுகிறார்கள். அவ்வாறு புதிய மின் இணைப்பு வழங்கும் பட்சத்தில் அதற்காக அவர்கள் செலுத்த வேண்டியதாயிருக்கும் கட்டணங்களைப் பொறுத்து ஏற்கெனவே அவர்கள் செலுத்தி விட்டு திரும்பப் பெறாமல் இருக்கும் மொத்தம் ரூ.1,83,700/– புதிய விண்ணப்ப கட்டணங்களுக்காக சரி செய்து கொள்ள வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறார்.

4. <u>எதிர்மனுதாரரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>

4.1 திரு. என். சாகுல் ஹமீது மற்றும்திருமதி. ஹமீதா 143, குருவிக்காரன் சாலை 5வது தெரு, மதுரை என்ற விலாசத்தில் புதிய தொழிற்சாலை மின் இணைப்புகள் கோரி 0080613770 நாள் 7.6.2013 மற்றும் 0080613771 நாள்7.6.2013 பிரகாரம் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டது. அதற்காக முறையே ரூ.92,650/– மற்றும் ரூ.91,050/– மேல்முறையீட்டாளரால் 28.6.2013 அன்று செலுத்தப்பட்டது.

4.2 இந்நிலையில் மேற்கண்ட மின் இணைப்பு கோரும் இடம் 17.9.2013 நீட்டிப்பு பணி மேற்கொள்ளப்படுவதற்காக ஆய்வு செய்யப்பட்ட போது கீழ்கண்ட குறைபாடுகள் கண்டறியப்பட்டது.

(1) மின் இணைப்பு வேண்டும் இடம் விண்ணபத்தில் இணைக்கப்பட்ட இட உரிமை ஆவணத்திலிருந்து முற்றிலும் வேறாக உள்ளது.

(2) மின் இணைப்பு வேண்டும் இடத்திற்கு செல்லும் பாதை தொடர்பாக நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.12755/86, W.P.No.2544/89ன்படி இடைக்கால தடை உள்ளதால் விஸ்தரிப்பு பணி மேற்கொண்டு மின்மாற்றி அமைப்பதற்கு இயலாத நிலை உள்ளது.

(3) மின் இணைப்பு கோரும் இடம் தயார் நிலையில் இல்லாமல் (not ready) பழைய இரும்பு சாமான்கள் வைக்கும் இடமாக உள்ளது.

(4) மேற்கண்ட இடத்தில் மி.இ.எண்.008–014–350, 008–014–326 மற்றும் 008–014–418 ஆகிய மின் இணைப்புகள் பயன்பாட்டில் உள்ளது.

4.3 இந்த குறைபாடுகளால் மின் இணைப்பு வழங்க இயலாத நிலையில் உள்ளது. எனவே, மின இணைப்பு கோரும் இடத்தின் வரைபடத்துடன் கூடிய வருவாய் ஆவணங்கள் ஒரு வார காலத்திற்குள் அனுப்பிடுமாறு கடிதம்

எண்.உசெபொ/ப/அ.நகர்/வ.ஆ/அ.எண்.222/2013 நாள்19.3.2013 அந்த இடத்தில் உள்ள மின் நுகர்வோர் பிரதிநிதி அவர்களிடம் 20.9.2013 அன்று சார்பு செய்யப்பட்டது.

**4.4** கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாததால் புதிய மின் இணைப்புகோரும் விண்ணப்பங்கள் ரத்து செய்து கடித எண்.உசெபொ/ப/அ.ந./வ.ஆ./அ.எண்.229/2013 நாள் 28.9.2013படி நுகர்வோருக்கு கூரியர் தகவல் மூலம் அனுப்பப்பட்டது. மேற்படி கடிதம் பெற்றுக்கொள்ள மறுக்கப்பட்டதால் திரும்பி வந்துவிட்டது. திரு. சாகுல் ஹமீது 8.10.2013 அன்று அலுவலகத்திற்கு வந்த பொழுது மேற்படி 28.9.2013 நாளிட்ட கடிதம் அவரிடம் சார்பு செய்யப்பட்டது. அவருடன் வந்த அவரது பிரதிநிதி கையொப்பம் இட்டு பெற்றுக்கொண்டார். இந்த நிலையில் விண்ணப்பம் ரத்து செய்த விபரம் தனக்கு தெரியது என முறையீட்டாளர் கூறியிருப்பது உண்மையில்லை.

**4.5** பின்பு 25.10.2013 அன்று மின் இணைப்பிற்கான விண்ணப்பம்ரத்து செய்யப்பட்டதால் அதற்கு கட்டிய பணத்தினை திரும்ப வழங்குமாறு திரு. சாகுல் அமீது விண்ணப்பம் செய்தார். அவரது விண்ணப்பத்தின்படி பணம் திரும்ப தர இயலாது என மேற்பார்வை பொறியாளர் அவர்களால் உத்தரவு வழங்கப்பட்டது.

**4.6** அதனை தொடர்ந்து தலைவர், நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்/பெருநகர், மதுரை அவாகளிடம் மேல்முறையீட்டாளர் மேல்முறையீடு செய்தார். மேல்முறையீட்டிற்கு கீழ்கண்ட உத்தரவு வழங்கப்பட்டது.

"*1. It is the responsibility of the petitioner to setright the way leave problem at his own cost enabling TANGEDCO to lay the electric supply lines as per the proviso in the TNERC regulation.*

*2. The petitioner can register a fresh application after attending the remaks of TANGEDCO officers*

*3. The amount already paid by the petitioner cannot be refunded (Except MCD).*

*4. TANGEDO should refund the MCD amount to the consumer and effect the supply to the consumer as per rules in vogue if he registers a fresh application."*

**4.7** திரு. சாகுல் ஹமீது மற்றும் திருமதி. ஹமீதா அவர்களது புதிய தொழிற்சாலை மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் தொடர்பாக 19.9.2013 நாளிட்ட கடிதம் மூலம் உதவி செயற்பொறியாளர் அண்ணா நகர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட குறைபாடுகளான

(1) மின்பாதை மேம்பாடு செய்ய வேண்டிய பகுதி அமைந்துள்ள இடம் நீதிமன்ற வழக்கிற்கு உட்பட்டுள்ளதால் விண்ணப்பதாரர் அதனை நிவர்த்தி செய்யாமல் மின் இணைப்பு வழங்க இயலாது.

(2) மின்பாதை செல்லும் இடத்தில் உள்ள தடைகள் விண்ணப்பதாரரால் சரிசெய்ய இயலாத காரணத்தால் மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் ரத்து செய்யப்படும் போது விண்ணப்பத்துடன் செலுத்திய தொகை திரும்ப தருவதற்கு TNERC விதிகளில் இடமில்லாததால் பணம் திரும்ப தரப்படவில்லை

(3) மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தினை தவிர்த்து வேறு ஒரு இடத்திற்கு மின் இணைப்பு வழங்க இயலாது. எனவே, திரு. சாகுல் ஹமீது மற்றும் திருமதி. ஹமீதா அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

## 5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரைக்கு எதிரான மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>

5.1 மதுரை, எண்.14, குருவிக்காரன் சாலை 5வது தெருவில் அவர்களுக்கு சொந்தமான சுமார் 221/2 சென்ட் இடம் மேற்படி முகவரியில் உள்ளது. அதில் பெரிய அளவிலான கட்டிடம், மற்றும் அலுவலகம் உள்ளது. மேற்படி இடத்தில் M/s நாகூரார் பிளாஸ்டிக் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில் கழிவு பிளாஸ்டிக் பொருட்களை வாங்கி அதை சிறு துண்டுகளாக்கி பின் உருச் செய்யும் தொழில் செய்ய எண்ணி, இரண்டு சிறு புதிய தொழிற்சாலை மின்னிணைப்புகள் அவர்கள் இருவரது பெயரில் கேட்டு பெறுவதற்காக அவர்கள் இருவரும் கடந்த 7.6.2013 தேதியன்று இரண்டு விண்ணப்பங்களை (சட்டப்படி தேவையான வருவாய் மற்றும் இதர ஆவணங்கள் ஆகியவை இணைத்து) மதுரை, அண்ணா நகரில் உள்ள மின்பகிர்மான உதவி செயற்பொறியாளர் அவர்களிடம் வழங்கியுள்ளார்.

5.2 அப்பொழுது இருந்த உதவி செயற்பொறியாளர் அவர்கள் முறையாக அவர்கள் இருவரின் புதிய மின் இணைப்பு விண்ணப்ப மனுக்களை பெற்று பரிசீலனை செய்து ஏற்றுக்கொண்டு அதன் பின் புதிய தொழிற்சாலை மின்னிணைப்பு பெறவிருக்கும் அவர்களது இடத்தை உதவி செயற்பொறியாளர்/அண்ணா நகர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோர் கொண்ட அதிகாரிகளை கொண்டு ஆராய்ந்து ஆய்வு செய்த பின்பு இரண்டு மின் இணைப்புகளை கொடுக்க உத்தரவிடப்பட்டது.

5.3 மேலும், மேற்படி உதவி செயற்பொறியாளரின் உத்தரவிற்கிணங்க Regn Fees. Caution Deposit. Development Charges, EMD for Industrial (SCI) மற்றும் service charges போன்ற வகையினங்களுக்காக மொத்தம் ரூபாய் 92,650/– மட்டும் அவரது பெயரில் முறையே 7.6.2013 மற்றும் 28.6.2013 ஆகிய தேதிகளில் செலுத்தி ரசீதுகள் பெற்றுள்ளார். அதே போன்ற மேற்கண்ட வகையினங்களுக்காக மொத்தம் ரூ.91,050/– மட்டும் அவரது மனைவி ஹமீதா பெயரில் அதே தேதிகளில் செலுத்தி ரசீதுகளும் பெறப்பட்டுள்ளது. அதற்குபின் சிறு புதிய தொழிற்சாலை மின் இணைப்பு வழங்குவதற்கான மின் உபகரணங்கள் அனைத்தும் அவருடைய சொந்த செலவிலேயே மின்வாரிய ஊழியர்களால் அவர்களின் மேற்படி தொழிற்சாலை இடத்திற்கு கொண்டு வந்து இறக்கி வைக்கப்பட்டது.

5.4 2013 அக்டோபர் மாத இடைவெளியில் வெளியூரிலிருந்து மதுரை வந்த அவர் அண்ணா நகர் பிரிவு அலுவலகத்திற்கு சென்று உதவி செயற்பொறியாளரை சந்திக்க சென்ற பொழுதுதான் அப்பொழுது இருந்த உதவி செயற்பொறியாளர் பணி மாற்றம் செய்யப்பட்டு வேறு ஒரு புதிய உதவி செயற்பொறியாளர் அவ்விடத்திற்கு பணிக்கு வந்துள்ளது தெரிந்தது.

4.5 அவர்களின் புதிய தொழிற்சாலைக்கு மின்னிணைப்பு வழங்காதது பற்றி கேட்டதற்கு அப்பொழுது இருந்த உதவி செயற்பொறியாளர் திரு. எம். சுப்பிரமணியன் அவர்கள் புதிய தொழிற்சாலை அமையவிருக்கும் இடத்திற்கு உதவி செயற்பொறியாளர் சென்று மறுஆய்வு செய்ததாகவும், அதில் சில குறைபாடுகள் இருந்ததாகவும் அது குறித்து 19.9.2013 அன்று ஏழு நாள் கால அவகாசம் கொடுத்து அறிவிப்பு ஒன்று அவருக்கு அனுப்பியதாகவும் சொன்னார். அவர் அறிவிப்பு அனுப்பிய விவரம் மேல்முறையீட்டாளருக்குத் தெரியாது. அதற்கு காரணம் அச்சமயம் அவர் தொழில் விசயமாக வெளியூர் சென்றிருந்ததால் அவரால் இதுபற்றி அறியமுடியவில்லை.

5.6 இது சம்பந்தமாக மீண்டும் ஒருமுறை உதவி செயற்பொறியாளர் அவர்களை தொடர்புகொண்டு மின் இணைப்பு பற்றி கேட்டதற்கு அவர்களின் புதிய மின் இணைப்புகள் சம்மந்தப்பட்ட அவர்களின் இரண்டு விண்ணப்பங்களையும் கேன்சல் செய்யப்பட்டு விட்டதாக தெரிவித்தார். அதற்கு அவர் மேற்படி இடத்தில் தொழில் செய்யும் பொருட்டு சுமார் ஒரு கோடி ரூபாய் வரை முதலீடு செய்யப்பட்டு பல லட்சம் ரூபாயும் செலவு செய்யப்பட்டுள்ள விவரத்தையும் தாங்கள் புதிய தொழில் மின் இணைப்பு

வழங்கவில்லை என்றால் அவர்களுக்கு பெருத்த நஷ்டமும் கஷ்டமும் ஏற்படும் என்று சொன்னார்.

5.7 அதற்கு உதவி செயற்பொறியாளர் திரு. எம். சுப்பிரமணியன் அவர்கள் மின் இணைப்பு கோரும் விண்ணப்பங்கள் ஏற்கெனவே கேன்சல் செய்யப்பட்டு விட்ட காரணத்தால் அதனை உயிர்ப்பிக்க முடியாது என்றும், அதனால் அவர்கள் செலுத்திய பணத்தை திரும்ப பெற மனு எழுதி கொடுத்து பணத்தை பெற்றுக் கொள்ளுங்கள் என்று அவரிடம் கூறினார். அதற்கு அவர் பணத்தை திரும்ப பெறுவதற்காக தான் பணத்தை செலுத்தவில்லை என்றும் என்னுடைய தொழிற்சாலைக்கு மின்இணைப்பு பெறவேண்டும் என்றும் கூறியுள்ளார். அதற்கு உதவி செயற்பொறியாளர், ஒரு கடிதம் கொடுத்து அவர்களுடைய பணத்தை முதலில் பெற்று கொள்ளுங்கள் என்றும், பிறகு மீண்டும் புதிய மின் இணைப்பு விண்ணப்பங்களை அளித்தால், உடனடியாக மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று உறுதி அளித்ததால் அவர்கள் வேறு வழியில்லாமல் உதவி செயற்பொறியாளர் வற்புறுத்தலின்பேரில் பணத்தை திரும்ப பெறும் 25.10.2013 நாளிட்ட கடிதத்தை உதவி செயற்பொறியாளருக்கு அளித்தார்கள். ஆனால் அவர் சொன்னபடி அதை செய்யாமல் காலம் தாழ்த்தி வந்ததோடு அவர்களை மிகுந்த மனஉழைச்சலுக்கு ஆளாக்கினார்.

5.8 அதனால் அவர்கள் வேறு வழியில்லாமல் மதுரை மின்குறைதீர்க்கும் மன்றத்தின் தலைவர் அவர்களுக்கு 7.6.2014 நாளிட்ட கடிதத்தை அளித்து அவர்களுக்கு புதிய தொழிற்சாலைக்கு மின் இணைப்பு வழங்க வேண்டி முறையீடு செய்தார்.

5.9 உதவி செயற்பொறியாளர், தனது பதிலுரையில் குறிப்பிட்டுள்ள தொழிற்சாலை இடத்தில் 17.9.2013 அன்று தான் ஆய்வு செய்தபோது அவ்விடத்தில் சில குறைபாடுகள் இருப்பதாக தெரிவித்துள்ளார். அவர்களுடைய தொழிற்சாலை இடம் குறைபாடுகள் உள்ள இடமாக இருந்திருந்தால் மின் வாரிய அதிகாரிகள்(உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோர்) முதலில் ஆய்வு செய்து மின் இணைப்பு கொடுப்பதற்கு ஏதுவாக மின் தளவாடங்கள் கொண்டு வந்து இறக்கி வைத்திருக்க மாட்டார்கள். அதற்கு ஆதாரமாக புகைபடங்கள் மேல்முறையீட்டு மனுவுடன் இணைத்துள்ளார்.

5.10 மேலும், மின்னிணைப்பு கொடுக்கும் இடத்தில் செல்லும் பாதை தொடர்பாக நீதிமன்ற வழக்கு எண்.12755/1986 மற்றும் 2544/1989இன்படி இடைக்கால தடை

உள்ளதாகவும் விஸ்தரிப்பு பணி மேற்கொண்டு மின்மாற்றி அமைப்பதற்கு இயலாத நிலை உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

**5.11** ஆனால், உதவி செயற்பொறியாளர் கூறியபடி மின்பாதை செல்லும் இடம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு எதுவும் இல்லை. இது ஆதாரமற்ற பொய் மேலும் உதவி செயற்பொறியாளர் கூறும் பாதை வழியே ஏற்கெனவே ஏகப்பட்ட மின் பாதைகள் செல்கின்றன. மேலும், அவர்களின் தொழிற்சாலைக்கு மின்இணைப்பு கொடுப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மின்பாதை இடத்திற்கு எந்தவித நீதிமன்ற தடையோ, வழக்கோ கிடையாது என்பதை மாண்பமை மின் குறைதீர்ப்பாளர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம். அதற்கு ஆதாரமாக அவரது முறையீட்டு மனுவுடன் மின்பாதை வழிதடங்கள் செல்லும் புகைபடங்கள் இணைத்துள்ளார்.

**5.12** மேலும், உதவி செயற்பொறியாளர் கூறியபடி அவரது தொழிற்சாலை இடம் தற்பொழுது தயார்நிலையில் இல்லை (not ready) என்றும் அது பழைய இரும்பு சாமான்கள் வைக்கும் இடமாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இது அப்பட்டமான பொய், அய்யா, அவரது தொழிற்சாலை கழிவு பிளாஸ்டிக் பொருட்களை வாங்கி அதை சிறு துண்டுகளாக்கி பின் உருச் செய்யும் தொழில் ஆகும்.

**5.13** மின் இணைப்பு விண்ணப்பங்கள் ரத்து செய்யப்பட்டுள்ள செய்தி உதவி செயற்பொறியாளர் அவர்கள் நேரில் சென்று கேட்டதற்கு பின்பே ரத்து செய்யப்பட்டுள்ள விபரம் சொன்னார். அதேபோல், அவர்களுக்கு **19.9.2013** நாளிட்ட கடிதத்தை அவர்களின் பிரதிநிதியிடம் **20.9.2013** அன்று சார்பு செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார். அக்கடிதம் யார் பெற்றுக்கொண்டார்கள் என்பது அவர்களுக்கு தெரியாது. அவருடைய தொலைபேசி எண். உதவி செயற்பொறியாளரிடம் உள்ளது. இதுபோன்ற கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பது தகவலாககூட தெரிவிக்கவில்லை. மேலும், அக்கடிதம் யார் பெற்றுக்கொண்டார்கள் என்பதும் அவர்களுக்கு தெரியாது. அதுசமயம் அவர் தொழில் காரணமாக வெளியூரில் இருந்துள்ளார்.

**5.14** உதவி செயற்பொறியாளர் அவர்கள் கோரும் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்ட நிலையிலும் அவர்களது மின் இணைப்பு விண்ணப்பங்கள் கேன்சல் செய்யப்பட்டுள்ளன. மேலும், அவ்வாவணங்களில் ஏதேனும் குறைபாடுகள் இருந்திருந்து அவரது கவனத்திற்கு உதவி செயற்பொறியாளர் கொண்டு வந்திருந்தால், உடனடியாக

மதுரைக்கே வந்து உதவி செயற்பொறியாளர் கேட்கும் சரியான ஆவணங்களையே அவர் சமர்ப்பித்திருப்பார்.

5.15 மேலும், உதவி செயற்பொறியாளர் அவர்கள் அவரின் கடிதம் 25.10.2013 நாளிட்டவைகளை காட்டி, அவைகள் பணத்தை திரும்ப பெறுவதற்கான விண்ணப்பங்களாக சமர்ப்பித்து காரணம் காட்டி உள்ளார். அய்யா, அக்கடிதங்களை உதவி செயற்பொறியாளர் அவர்கள் வற்புறுத்தலின் பேரிலேயே அவர்கள் அக்கடிதங்களை உதவி செயற்பொறியாளரிடம் சமர்ப்பித்தோம். அவர்களின் முழு நோக்கமே மின் இணைப்பு பெறுவதே தவிர பணத்தை திரும்ப பெறுவதற்கு அல்ல. ஆனால், உதவி செயற்பொறியாளர் அவர்கள் அதனையும் ஒரு காரணமாக காட்டி அவர்களது மின் இணைப்பு கோரும் விண்ணப்பங்களை கேன்சல் செய்துள்ளார் என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறார்.

## 6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 29.1.2015 மற்றும் 3.3.2015 ஆகிய நாட்களில் மின்குறைதீர்ப்பாளர் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திரு. சாகுல் ஹமீது அவர்கள் கலந்து கொண்டு தம்முடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. எம். சுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர், அண்ணா நகர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

## 7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளர்களின் சார்பில் கலந்துகொண்டு திரு. சாகுல் ஹமீது அவர்கள் தன்னுடைய Rejoinderல் கூறிய வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 அவர் தன்னுடைய பெயரிலும் தன் மனைவியின் பெயரிலும் விண்ணப்பம் செய்துள்ள தொழிற்சாலைக்கான மின் இணைப்பை வழங்க வேண்டும் என்றும், தான் மின் வாரியத்தில் செலுத்திய பணத்தை திரும்ப வேண்டும் என்று கேட்டது உதவி செயற்பொறியாளரின் ஆலோசனையின்படிதான் என்றும் வாதாடினார்.

7.3 தற்பொழுது அந்த இடத்தில் மின்பாதை அமைப்பதற்கு ஆட்சேபணை இல்லை என்றும் வாதிட்டார். தன்னால் அவ்வாறு ஆட்சேபனையாளர்களிடமிருந்து சட்டப்படியான ஒப்புதலை பெற்றுதரமுடியும் என்று வாதிட்டார்.

7.4 தங்களுடைய விண்ணப்பங்களை பதிவு செய்து மதீப்பீடு தயாரித்து தளவாட சாமான்களையும் தொழிற்சாலை இடத்திற்கு கொண்டு வந்தபின்பு, மின் இணைப்பு வழங்காமல் நீதிமன்ற தடை உத்தரவு உள்ளது என்று தெரிவிப்பது தவறு என்று வாதாடினார்.

7.5 மேலும், தங்களுடைய உரிமை ஆவணங்கள் ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட பின்பு தன்னுடைய ஆவணங்கள் சரியில்லை என்று தெரிவிப்பது தவறு என்று வாதுரை புரிந்தார்.

7.6 மேலும், நீதிமன்ற தடையுத்தரவு உள்ளது என்று கூறப்படும் இடத்தில் ஏற்கனவே மின்பாதைகள் உள்ளன. எனவே, மின்பாதை அமைத்து மின்இணைப்பு வழங்குவது தவறு அல்ல என்றும் வாதிட்டார்.

7.7 மேலும், உதவி செயற்பொறியாளர் அவர்கள்அவருடைய விண்ணப்பத்தை தள்ளுபடி செய்வதற்கு முன்பாக அவருக்கு அனுப்பியதாக கூறப்படும் 19.9.2013 நாளிட்ட அறிவிப்பு அவரால் பெறப்படவில்லை என்றும் ஆனால், அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்டடேன் என்று கையொப்பம் இட்டுள்ளவர் யார் என்று தெரியாது என்றும் தெரிவித்தார்.

7.8 உதவி செயற்பொறியாளர், ஏற்கனவே விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்பதால் புதியதாய் விண்ணப்பம் செய்து மின் இணைப்பு பெற்றுக் கொள்ளலாம் என்றும் ஏற்கனவே செய்துள்ள விண்ணப்பங்களுக்கான பணத்தை திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்ததினால்தான் அவர் விண்ணப்பங்களுடன் கட்டிய பணத்தை திரும்ப அளிக்கவேண்டும் என்று கோரியுதாகவும் ஆனால் மின் இணைப்பு வேண்டும் என்பதுதான் தன்னுடைய கோரிக்கை என்றும் வாதிட்டார்.

7.9 மேற்கண்ட இடத்திலுள்ள மின் இணைப்புகளை தொழிற்சாலைக்கான இணைப்பு வழங்கும்பொழுது அவர் அவற்றை நிரந்தரமாக துண்டிக்க சம்மதம் என்றும் தெரிவித்தார்.

7.10 மேலும், அவர், மின் இணைப்பு கோரி விண்ணப்பம் செய்துள்ள இடங்களின் உரிமையில் எந்த வில்லங்கமும் இல்லை என்றும், உரிமையில் மாற்றம் வந்ததால் சொத்துவரி ரசீதில் சொத்தின் நம்பர் ஒரு விண்ணப்பத்திற்கு மாறியுள்ளது என்றும்,

ஆனால், சமர்ப்பிக்கப்பட்டுள்ள உரிமை ஆவணங்கள் சரிதான் என்றும் வாதுரை புரிந்தார்.

8. <u>எதிர்மனுதாரரால் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள்</u>

8.1 திரு. எம். சுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர், அண்ண நகர் அவர்கள் எதிர்மனுதாரர் சார்பில் கலந்து கொண்டு தம்முடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

8.2 அவர் மதிப்பீடு 20.6.2014ல் அனுமதியளிக்கப்பட்டது என்றும் work order 3.7.2013 அன்று பெறப்பட்டது என்றும் தெரிவித்தார்.

8.3 மேலும், மேற்கண்ட 250 கே.வி.ஏ மின்மாற்றி அமைத்துதான் மின் இணைப்பு வழங்கமுடியும் என்றும், ஆனால், அதற்கான வேலையை ஆரம்பிக்கும்பொழுது மேற்கண்ட இடத்தில் ஏற்கனவே நீதிமன்ற தடை உத்தரவு உள்ளது என்ற அறிவிப்பு பலகை உள்ளதால் மேல்முறையீட்டாளரிடம் அந்த தகவல் தெரிவிக்கப்பட்டது என்றும் மேலும், கீழ்கண்ட குறைகளும் அவருக்கு தெரியப்படுத்தப்பட்டது என்று தெரிவித்தார்.

(i) விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள இடஉரிமை ஆவணமும் மின்இணைப்பு கோரும் இடமும் முற்றிலும் வெவ்வேறாக உள்ளது.

(ii) மேற்கண்ட இடத்திற்கு மின் இணைப்பு வழங்க மின்பாதை விஸ்தரிப்பு செய்வதற்கு நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.12755/86, W.P.No.2544/89 (23.2.94) Court No.318/97(9.8.2000) தடையாக உள்ளது.

(iii) மேற்கண்ட இடம் பழைய இரும்பு சாமான்கள் வைக்கும் கோடவுன் ஆக பயன்பாட்டிலுள்ளது.

(iv) மேற்கண்ட இடத்தில் மின் இணைப்பு எண்.008–014–350, 008–014–326 மற்றும் 008–014–418 ஆகிய மின் இணைப்புகள் பயன்பாட்டிலுள்ளன.

8.4 மேலும், நீதிமன்ற தடையுத்தரவு உள்ள தகவல் பலகை அந்த இடத்தில் மின் இணைப்புகளுக்கான மதிப்பீடுகளை அனுமதிபெறும் பொழுது வைக்கப்படவில்லை என்றும் ஆனால், மின் விஸ்தரிப்பு பணிகளை செய்வதற்கு முயற்சிக்கும்பொழுதுதான் அந்த தகவல் பலகை வைக்கப்பட்டவிவரம் தெரிந்தது என்றும் தெரிவித்தார்.

8.5 மேற்கண்ட இடத்திலுள்ள மின் இணைப்புகளை புதிதாக தொழிற்சாலை மின் இணைப்புகள் வழங்கும்பொழுது நிரந்தரமாக மின்துண்டிப்பு செய்ய ஒப்புதல் கொடுத்தால்

(undertaking) மேற்கண்ட இடத்தில் புதிய தொழிற்சாலைக்கான மின் இணைப்பு வழங்கமுடியும் என்று தெரிவித்தார்.

8.6 மின் இணைப்பு கோரும் இடங்களில் தொழிற்சாலைக்கு தேவையான மின் உபகரணங்கள் நிறுவப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

8.7 மேலும், நீதிமன்ற தடையுத்தரவை நிவர்த்தி செய்து கொடுத்து தகுந்த உரிமை ஆவணங்களை சமர்ப்பித்தால் மின் இணைப்பு வழங்கமுடியும் என்றும் தெரிவித்தார். மேலும், இதில் நீதிமன்ற தடையுத்தரவு உள்ளதினால் தான் மதிப்பீடு அனுமதி பெறப்பட்டும் மின் இணைப்பு வழங்க நீட்டிப்பு வேலைகளை செய்யவில்லை என்றும் தெரிவித்தார்.

## 9. <u>எதிர்மனுதாரரின் எழுத்துபூர்வமான வாதுரை:</u>

9.1 உதவி செயற்பொறியாளர், பகிர்மானம், அண்ணாநகர் அவர்கள் தன்னுடைய 9.2.2015 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்ட விவரத்தை தெரிவித்துள்ளார்.

(i) மனுதாரரின் இடம் வைகை ஆற்று புறம்போக்கு என வரையறுக்கப்பட்டு அது தொடர்பான சீராய்வு மனு நிலுவையிலுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

(ii) W.P. 2544/1989 மற்றும் W.P. 1275/1986 ல் 23.2.1984 ல் வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவின் நகல்களையும் சமர்ப்பித்துள்ளார்.

## 10. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>

10.1 மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், இருதரப்பினராலும், கேட்புரை நாட்களின் பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) ஒரு விண்ணப்பதாரர், மின்னிணைப்பு கேட்டு அதற்குரிய கட்டணங்களை செலுத்திய பின்பு எந்த நிலையில், அந்த கட்டணங்களில் மின்னளவு காப்பு தொகையைத் தவிர மற்ற கட்டணங்களை திரும்ப தர இயலாது என்று உரிமம்தாரர் கூறமுடியும் ?

(ii) மின்னிணைப்பு கேட்டு பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை, எதிர்மனுதாரரால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால், செலுத்திய

கட்டணங்களில் மீட்டர், காப்பு தொகையை தவிர மற்றவைகளை திரும்ப வழங்க முடியாது என்பது சரியா ?

**11. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு:</u>**

**11.1** ஒரு விண்ணப்பதாரர், அவர் மின்னிணைப்பு பெறுவதற்காக செலுத்தியுள்ள கட்டணங்களை மின்னிணைப்பு பெறாவிடில் எந்த சூழ்நிலையில் திரும்ப பெறமுடியாது என்பதை தெரிந்து கொள்ள நாம், தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பின் விதி **31(2), 31(3)** மற்றும் **34**ஐ ஆராய வேண்டும். எனவே, **28.9.2013** அன்று விண்ணப்பத்தை தள்ளுபடி செய்யும்பொழுது வழக்கத்திலிருந்த அந்த விதிகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

*"**31(2)** மின் வழங்கல் தரப்பட ஆயத்தமென எழுத்துமூலமான அறிவிப்பு தரப்பட்ட தேதியிலிருந்து, கோரும் நுகர்வோர், உயர் அழுத்த வகையினத்துக்கு மூன்று மாதங்களுக்குள்ளும், தாழ் அழுத்த வகையினத்துக்கு ஒரு மாதத்துக்குள்ளும் தனது மின் வழங்கலைப் பெறவேண்டும்.*

*(3) கோரும் நுகர்வோர், மேற்குறிப்பிட்ட காலத்துக்குள் தனது மின் வழங்கலைப் பெறத் தவறினால் அம்மின்வழங்கலைப் பெற்றுக் கொள்ளும்படி உயரழுத்த வகையில் மேலும் **3** மாதகாலமும், தாழ் அழுத்தவகையில் மேலும் ஒரு மாத காலமும் உள்ள அறிவிப்பு, கோரும் நுகர்வோருக்கு அனுப்பப்படும். இந்த அறிவிப்புக் காலத்துக்குள்ளும் அவர் மின்வழங்கலைப் பெறாவிட்டால் தாழ் அழுத்த வகையில் விண்ணப்பம் கெடு முடிந்ததாகக் கொள்ளப்பட்டு தள்ளுபடி செய்யப்படும். உயர் அழுத்தவகையில் இசைவுப் பத்திரத்தை முடித்து, விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும். மின்னளவி பிணைய வைப்புத் தொகையைத் தவிர, மற்ற பிற மின்னிணைப்புக் கட்டணம், காப்பு வைப்புத் தொகை / மேம்பாட்டுத் தொகை போன்ற யாவும் இழப்புக்கு ஈடாக கழித்துக்கொள்ளப்படும். கோரும் நுகர்வோர், தனக்கேற்பட்ட அவரது கட்டுப்பாட்டில் இல்லாத நிலைமைகளால் மின் வழங்கல் பெற இயலாமல் போய்விட்டால், அத்தகையவருக்குக் காப்பு வைப்புத் தொகை, மேம்பாட்டு கட்டணங்கள் மற்றும் மின்னளவி பிணைய வைப்புத் தொகை ஆகியவை திரும்பத் தரப்படும்."*

11.2 மேற்கண்ட தமிழ்நாடு மின்பகிர்மான விதித் தொகுப்பின் விதி 31 (2) ஐ கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது, ஒரு மின்னிணைப்பு வேண்டும் என்றும் விண்ணப்பித்த நுகர்வோர், உரிமைதாரர், அவர் மின்னிணைப்பு தருவதற்கு தயார் என்று எழுத்துபூர்வமாக அறிவித்த அறிவிப்பின் நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் உயர் அழுத்த மின்னிணைப்பாக இருந்தால் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், தாழ் அழுத்த மின்னிணைப்பாக இருந்தால் ஒரு மாதத்திற்குள் பெற்றக் கொள்ள வேண்டும் என்றும் அறிய முடிகிறது.

11.3 மேலும் பகிர்மான விதித் தொகுப்பின் விதி 31 (3) ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது மேற்கண்ட காலக்கெடுவிற்குள் நுகர்வோர் மின்னிணைப்பைப் பெற்றுக் கொள்ளாவிடில் மேலும் மூன்று மாதம் கால அவகாசம் உயர் அழுத்த மின்னிணைப்பு விண்ணப்பதாரர்களுக்கும், ஒரு மாதம் தாழ் அழுத்த மின்னிணைப்பு விண்ணப்பதாரர்களுக்கும் வழங்கலாம் என்று தெரிகிறது. மேற்கண்ட கால அவகாசத்திற்குள் மின்னிணைப்பைப் பெறாவிடில் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும் என்றும் மின்னளவி பிணையத்தொகை தவிர மற்ற கட்டணங்கள் திருப்பி தரப்படமாட்டாது என்றும் அறிய முடிகிறது. மேலும், விண்ணப்பதாரர், force majeure காரணத்தால், மின்னிணைப்பைப் பெற்றுக் கொள்ளவில்லை எனில் காப்பு வைப்புத் தொகை மேம்பாட்டு கட்டணங்கள் மற்றும் மீட்டருக்கான பிணைய வைப்புத்தொகை (Meter Caution Deposit) ஆகியவை திரும்ப வழங்கப்படும் என்றும் அறிய முடிகிறது.

11.4 மேற்கண்ட மின் பகிர்மான விதிகளின்படி தாழ்வழுத்த மின்னிணைப்பு கோரும் நுகர்வோர் உரிமம்தாரர், தன்னுடைய தயார்நிலையை எழுத்து மூலமாக தெரிவித்த பின், முதலில் கொடுக்கப்பட்டுள்ள ஒரு மாத காலக்கெடு அல்லது அதன்பிறகு கொடுக்கப்படும் ஒரு மாத காலக் கெடுவிற்குள் மின்னிணைப்பைப் பெறாவிடில், அவரின் மின்னளவியின் பிணைய வைப்புத்தொகையைத் தவிர மற்ற பிற கட்டணங்களான மின்னிணைப்பு கட்டணம், காப்பு வைப்புத் தொகை, மேம்பாடு கட்டணம் ஆகிய அனைத்தையும் இழக்க நேரிடும். மின்னிணைப்பு கோரும் நுகர்வோர், force majeure காரணங்களால் மின்னிணைப்பைப் பெற முடியாவிடில் காப்பு வைப்புத்தொகை மேம்பாட்டு கட்டணங்கள் மற்றும் மின்னளவி பிணைய வைப்புத் தொகை திரும்ப தரப்படும்.

11.5 மின்பகிர்மான விதித்தொகுப்பு விதி 34 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“34. பிணை வைப்புத் தொகை (Earnest Money Deposit)*

*(1) பிணை வைப்புத் தொகையைச் செலுத்த வேண்டிய விண்ணப்பதாரர்கள், அத்தொகையை, விண்ணப்பப் பதிவுக் கட்டணத்துடன் செலுத்தக் கோரப்படுவார்கள்.*

*(2) மின் வழங்கல் பெறுவதற்கு முன்பு பிணை வைப்புத் தொகை முதலில் செலுத்திய காப்பு வைப்புத் தொகையில் ஈடு செய்துகொள்ளப்பட்டு அதற்குப் பிறகு மிச்ச தொகை ஏதேனும் செலுத்தப்பட வேண்டி இருந்தால் அதுவும் வசூலிக்கப்படும்.*

*(3) உயர் அழுத்த விண்ணப்பதாரரைப் பொருத்தவரையில், பிணை வைப்புத் தொகை, தொடக்க நிலைக் காப்பு வைப்புத் தொகைக்குச் சமமாக அமையும்.*

*(4) பதிவு செய்து விட்டு பிணை வைப்புத் தொகையை (EMD) கட்டிய பிறகும், மேம்பாட்டுக் கட்டணமும், மின்னிணைப்புக் கட்டணமும், மின்னளவி எச்சரிப்புக் கட்டணமும் கட்டுவதற்கு முன்பு விண்ணப்பதாரர் பின்வாங்கினால் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டு இழப்புக்காக பிணை வைப்புத் தொகையும் பறிமுதல் (forfeiture) செய்யப்படும்.*

*(5) அனைத்துக் கட்டணங்களும் கட்டி விட்டு இசைவுப் பத்திரமும் கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்ட பிறகு விண்ணப்பதாரர் பின் வாங்கினால் உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த வகை இரண்டுக்கும் மின்னளவி எச்சரிப்புத் தொகையைத் தவிர்த்துப் பிற செலுத்தப்பட்ட அனைத்துக் கட்டணங்களும் விண்ணப்பமும் தள்ளுபடி செய்யப்பட்டு , இசைவுப் பத்திரமும் முடிக்கப்படும்.*

*(6) மின்வழங்கல் பெறும் முன்பே, ஒரு பகுதி மின்தேவைக்கு மட்டும் பின்வாங்க விரும்பும் உயர் அழுத்த விண்ணப்பதாரரைப் பொருத்தவரையில், மேற்கூறிய பறிமுதல் விதி பின்வாங்கும் மின்தேவையின் விகிதத்தில் ஈடு செய்து கொள்ளப்படும்.*

*(7) மின்னிணைப்பு தரப்படும் தேதி வரையில் பிணை வைப்புத் தொகைக்கு வட்டி ஏதும் கிடையாது."*

11.5 மேற்கண்ட விதிகளில் 34 (4) மற்றும் 34 (5) தான் இந்த வழக்கிற்கு சம்மந்தமான விதிகள்.எனவே அவைகள் மட்டும் பரிசீலிக்கப்படுகிறது. மேற்கண்ட விதி 34 (4) ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, ஒரு விண்ணப்பதாரர், விண்ணப்பத்தைப் பதிவு செய்து பிணையத்தொகையை கட்டிய பின்பு, மேம்பாட்டு கட்டணமும், மின்னிணைப்பு கட்டணமும், மின்னளவி பிணையத்தொகையும் செலுத்துவதற்கு முன்பாக. விண்ணப்பதாரர், மின்னிணைப்பு வேண்டாம் என்று பின்வாங்கினால், விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டு, பிணை வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

**11.6** பகிர்மான விதி 34 (5)ஐ கூர்ந்துபடிக்கும் பொழுது நாம் அறிவது அனைத்து கட்டணங்களும் செலுத்திய பின்பு, இசைவு பத்திரமும் கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்ட பிறகு, விண்ணப்பதாரர் பின்வாங்கினால், மின்னளவி பிணையத்தொகையை தவிர்த்து அனைத்து கட்டணங்களும் விண்ணப்பமும் தள்ளுபடி செய்யப்படும். இசைவு பத்திரமும் முடிக்கப்பட்டு விடும் என்று தெரிகிறது.

**11.7** மின் பகிர்மான விதித் தொகுப்பின் விதிகள் **31(2), 31(3), 34(4)** மற்றும் **34(5)** ஆகியவற்றினை சேர்த்து படிக்கும்பொழுது கீழ்கண்ட நிகழ்வுகளில் ஒரு தாழ்வழுத்த விண்ணப்பதாரர், அவர் செலுத்திய கட்டணங்களில் மின் அளவிக்கான பிணைய வைப்புத்தொகைளை தவிர மற்ற கட்டணங்களைப் பெற முடியாது என்று தெரிகிறது.

(i) உரிமம்தாரர், தன்னுடைய தயார்நிலையை எழுத்துமூலமாக, விண்ணப்பதாரருக்கு தெரிவித்த பிறகு முதலில் கொடுக்கப்பட்ட காலக்கெடு வரை ஒரு மாதம் கடந்த பின்பு, மேலும் கொடுக்கப்பட்டுள்ள ஒரு மாதகாலத்திற்குள் மின்இணைப்பை பெற்றுக் கொள்ளாவிடில், அவர் மின்னளவியின் பிணையத்தொகையைத் தவிர செலுத்திய பிற கட்டணங்களாகிய மின்னிணைப்பு கட்டணம் (service connection charges) காப்பு வைப்பு தொகை (security Deposit) மற்றும் மேம்பாட்டு கட்டணம் (Development charges) ஆகியவற்றை இழக்க நேரிடும். ஆனால் மின்னிணைப்பை கோரும் விண்ணப்பதாரர், மின்னிணைப்பை பெறமுடியாமைக்கு force majure காரணங்கள் என்றால், காப்பு வைப்பு தொகை மேம்பாட்டு கட்டணங்கள் மற்றும் மின்னளவி பிணையத்தொகை திரும்ப தரப்படும்.

(ii) ஒரு விண்ணப்பதாரர், அனைத்து கட்டணங்களையும் செலுத்தி, இசைவு பத்திரமும் கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்ட பிறகு விண்ணப்பதாரர் மின்னிணைப்பு வேண்டாம் என்று பின்வாங்கினால், மின்னளவி பிணை வைப்புத் தொகை தவிர்த்து செலுத்தப்பட்ட அனைத்து கட்டணங்களும், விண்ணப்பமும் தள்ளுபடி செய்யப்பட்டு, இசைவுபத்திரமும் முடிக்கப்படும்.

**12.** **<u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு:</u>**

**12.1** என்னுடைய முதலாவது வழக்கெழு வினாவிற்கான தீர்வின்படி இரண்டு காரணங்களுக்காக, ஒரு விண்ணப்பதாரர் அவர் செலுத்திய மின் அளவிக்கான பிணையத்தொகைத் தவிர மற்ற கட்டணங்களை எல்லாம் இழக்க நேரிடும் என்று தீர்வு

செய்யப்பட்டுள்ளது. இந்த மேல்முறையீட்டாளரின் வழக்கு மேற்கண்ட இரண்டு காரணங்களுக்குள் வருகின்றதா என்பதை ஆராய வேண்டும்.

**12.2** தாழ் அழுத்த மின்னிணைப்பு கோரும் விண்ணப்பதாரருக்கு, உரிமம்தாரர், அவரின் விஸ்தரிப்பு வேலைகளை எல்லாம் முடித்து விட்டு, மின்னிணைப்பை வழங்க தன்னுடைய தயார் நிலையை விண்ணப்பதாரருக்கு ஒரு மாத காலத்திற்குள் மின் இணைப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அறிவிப்பு கொடுக்க வேண்டும். அவ்வாறு அந்த ஒரு மாத காலக்கெடுவிற்குள் விண்ணப்பதாரரால், மின்னிணைப்பைப் பெற முடியாவிட்டால், மேலும் ஒரு மாத கால அவகாசம் தரப்படும். அப்பொழுதும் மின் இணைப்பைப் பெற விண்ணப்பதாரர் முன்வரவில்லை எனில், மின் அளவிக்கான பிணையத்தொகையைத்தவிர அவர் செலுத்திய கட்டணங்களை இழக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்பட்டுள்ளது.

**12.3** ஆனால், என் முன்னால் உள்ள இந்த வழக்கில், எதிர்மனுதாரர், தன்னுடைய மின் விஸ்தரிப்பு பணிகளை முடிக்கவில்லை. புதிய மின்மாற்றி (transformer) அமைத்து தான், இந்த விண்ணப்பதாரருக்கு மின் இணைப்பு வழங்க முடியும். அந்த வேலை முடியவில்லை, தன்னுடைய தயார் நிலையை அறிவிக்கவும் இல்லை. எனவே, மேற்கண்ட நிலையில், மேற்கண்ட மின் இணைப்பை பெறுவதற்காக மேல்முயைீட்டாளர் செலுத்திய தொகையில் மின் அளவிக்கான பிணையத்தொகையை தவிர மற்ற கட்டணங்களை திரும்ப தர முடியாது. அவை பறிமுதல் செய்யப்படும் என்று கூற முடியாது.

**12.4** இரண்டாவது, ஒரு விண்ணப்பதாரர், எல்லா கட்டணங்களையும் செலுத்திய பின்பு, அவர் தனக்கு மின் இணைப்பு தேவையில்லை என்று பின்வாங்கினால், மின் அளவி பிணைய தொகையைத் தவிர மற்ற கட்டணங்களை அவர் இழக்க நேரிடும். ஆனால், இந்த வழக்கில், மேல்முறையீட்டாளர், தனக்கு மின் இணைப்பு வேண்டாம் என்று பின்வாங்கவில்லை. ஆனால், அவரின் மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தில் உள்ள குறைபாடுகளை தெரிவித்து மேற்கண்ட இடத்தின் வருவாய் துறை ஆவணங்கள் படத்துடன் ஏழு நாட்களுக்குள், சமர்ப்பிக்க வேண்டும் என்று **19.9.2013**ல் எதிர்மனுதாரர் கொடுத்த அறிவிப்பிற்கு, மேல் முறையீட்டாளர், வருவாய் துறை ஆவணங்களை படத்துடன் **19.9.2013** நாளிட்ட அறிவிப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க சமர்ப்பிக்கவில்லை என்பதால் **28.9.2013**ல் விண்ணப்பங்கள் உரிமம்தாரரால் ரத்து செய்யப்பட்டுள்ளன. எனவே, மேல் முறையீட்டாளர், அவருக்கு மின் இணைப்பு தேவை

இல்லை என்று அவருடைய விண்ணப்பத்தை திரும்ப பெறவில்லை. படத்துடன் கூடிய வருவாய்துறை ஆவணம் சமர்ப்பிக்கப்படவில்லை என்ற காரணத்திறகாக எதிர்மனுதாரர் சார்பில் தான் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே, மேல் முறையீட்டாளர், மின் இணைப்பு வேண்டாம் என்று பின் வாங்கவில்லை என்று தெரிகிறது. மேலும், மேல்முறையீட்டாளர், தன்னால் செலுத்தப்பட்ட கட்டணங்களை திரும்ப தரவேண்டும் என்று தெரிவித்த கடிதத்தில், கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

*"நான் என். சாகுல் ஹமீது எண்.14, குருவிக்காரன் சாலை, 5வது தெரு, மதுரை 20ல் இருந்து புதிய தொழிற்சாலை மின் இணைப்பு வேண்டி பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட இடம் 18.9.2013 அன்று ஆய்வு செய்யப்பட்டதில் மின்வழி தடம்செல்லும் பாதை கோர்ட்டில் வழக்கு நிலுவையில் இருப்பதால் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. ஆகையால் தாங்கள் கொடுத்த ஒரு வார காலக்கெடு எங்களால் சரி செய்ய இயலாது. ஆகையால் நான் கட்டிய மின் இணைப்பு வைப்புத்தொகையை திருப்பித் தருமாறுமிகவும் பணிவுடன் விண்ணப்பித்துக்கொள்கிறேன்.*"

12.5 மேற்கண்ட கடிதத்தின்படி, மின் வழித்தடம் செல்லும் பாதை கோர்ட்டில் வழக்கு நிலுவையிலுள்ளதால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், எதிர்மனுதாரர் கொடுத்துள்ள ஒரு வார காலத்திற்குள், அந்த குறையை சரி செய்ய முடியாது என்பதால், மேல்முறையீட்டாளர், தான் செலுத்திய மின் இணைப்பு வைப்பு தொகையை திரும்ப தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

12.6 இந்த விண்ணப்பத்தை ரத்து செய்தது, வருவாய் ஆவணங்கள் படத்துடன் சமர்ப்பிக்கவில்லை என்பதால், விண்ணப்பம் ரத்து என்று எதிர் மனுதாரர் தெரிவித்துள்ளார். ஆனால், மின் வழித்தடம் அமைக்க செல்லும் பாதையில் கோர்ட்டில் வழக்கு உள்ளதால், தன்னால் ஒரு வார காலத்திற்கள் குறையை நிவர்த்தி செய்ய முடியவில்லை என்று 25.10.2013 அன்று விண்ணப்பதாரர் தெரிவித்து செலுத்திய கட்டணங்களை திரும்ப கோரியுள்ளார். இவற்றில் எது சரி என்பதற்கான கீழ் கண்ட ஆவணங்களையும் ஆராய வேண்டும்.

(i) உதவி செயற்பொறியாளரின் 19.9.13 நாளிட்ட கடிதம்

(ii)உதவி செயற்பொறியாளரின் 28.9.13 நாளிட்ட கடிதம்

12.7 உதவிச் செயற்பொறியாளரின் **19.9.13** நாளிட்ட கடிதத்தின் சம்மந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"திரு. என். சாகுல் ஹமீது மற்றும் எஸ். ஹமீதா 14, குருவிக்காரன் சாலை 5வது தெரு, மதுரை என்ற விலாசத்தில் புதிய தொழிற்சாலை மின் இணைப்பு வேண்டி பதிவு செய்யப்பட்ட விண்ணப்பம் தொடர்பாக மேற்கண்ட இடம் 17.9.2013 அன்று ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட குறைபாடுகள் கண்டறியப்பட்டது.*

*1. விண்ணப்பத்தில் இணைக்கப்பட்ட இடஉரிமை ஆவணமும் தாங்கள் மின் இணைப்பு வேண்டி கோரும் இடமும் முற்றிலும் வெவ்வேறாக உள்ளது.*

*2. தாங்கள் கோரியுள்ள இடத்திற்கு மின் இணைப்பு வழங்க மின்பாதை விஸ்தரிப்பு செய்வதற்கு நீதிமன்ற வழக்கு எண். W.P No.12755/86, WP No.2544/89 (23.2.94) Court No 318/97 (9.8.2000) தடையாக உள்ளது.*

*3. மேற்கண்ட இடம் பழைய இரும்பு சாமான்களை வைக்கும் கோடவுன் ஆக வணிக பயன்பாட்டில் உள்ளது.*

*4. மேற்கண்ட இடத்தில் மின் இணைப்பு எண்.கள் 008–014–350, 008–014–326, 008–014–418 ஆகிய மின் இணைப்புகள் பயன்பாட்டில் உள்ளன.*

*எனவே, மேற்கண்ட குறைபாடுகளால் மின் இணைப்பு வழங்க இயலாத நிலையில் உள்ளது. எனவே, தாங்கள் மேற்கண்டஇடத்தின் வருவாய்துறை ஆவணங்கள் வரைபடத்துடன் இக்கடிதம் கண்ட 7 தினங்களுக்குள் இவ்வலுவலகத்தில் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தவறும்பட்சத்தில் பதில் தெரிவிக்க ஏதும் இல்லை என கருத்தில் கொண்டு மேற்படி விண்ணப்பம் ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. "*

12.8 உதவி செயற்பொறியாளரின் **28.9.2013** நாளிட்ட கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"திரு. N. சாகுல் ஹமீது & திருமதி. S. ஹமீதா 14, குருவிக்காரன் சாலை, 5வது தெரு, மதுரை என்ற விலாசத்தில் புதிய தொழிற்சாலை மின் இணைப்பு வேண்டி பதிவு செய்யப்பட்ட விண்ணப்பம் தொடர்பாக மேற்கண்ட இடத்தின் வருவாய் துறை ஆவணங்கள் வரைபடத்துடன் பார்வை 2ல் குறிப்பிட்டுள்ள கடிதத்தின்படி இவ்வலுவலகத்தில் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. தாங்கள் இதுநாள் வரை*

*சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே தாங்கள் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ரத்து செய்யப்படுகிறது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.”*

**12.9** மேலே பத்தி **12.7**ல் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு காரணங்களில் நீதி மன்ற வழக்குகள் தடையாக உள்ளன என்பதை தவிர மற்ற காரணங்கள் எல்லாமே ஒரு மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தைப் பதிவு செய்வதற்கு முன்பாகவே சுட்டிக்காட்டப்பட்டிருக்க வேண்டியவை. மேலும், கேட்புரையில் கலந்து கொண்ட உதவி செயற்பொறியாளரும், மேற்கண்ட குறைகளில் **3** மற்றும் **4** எண் இடப்பட்ட குறைகள் விண்ணப்பதாரருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அவைகள், மின் இணைப்பு பெறுவதற்கு முன்பாகவே நிவர்த்திக்கப்பட்டுவிடும் என்றும் மேல்முறையீட்டாளர் உறுதி அளித்தால் அந்த குறைகள் மின் இணைப்பு வழங்க தடையாக இருக்காது என்று தெரிவித்தார். எனவே, ஒன்று மற்றும் இரண்டில் உள்ள குறைகள் தான் முக்கியமானவை என்றும் வாதிட்டார்.

**12.10** உரிமைச் சான்றை பொறுத்த வரையில், மேல்முறையீட்டாளர், தன்னுடைய உரிமைக்கு சான்றாக சொத்தின் விற்பனை பத்திரத்தின் நகலும், மாநகராட்சியின், வரி செலுத்திய ரசீதும் இணைக்கப்பட்டுள்ளன என்றும், அவைதான் வாரிய விதியின்படி தேவையான ஆவணங்கள் என்றும் வாதிட்டார். மேலும், மேற்கண்ட ஆவணங்களின்படி உள்ள இடத்தில் மின் இணைப்பை வழங்கினால் போதும் என்று தெரிவித்தார். அவர், மின் இணைப்பை பெறுவதற்காக நிறுவியுள்ள பாக்ஸ் அவருக்கு சொந்தமான இடத்தில் தான் உள்ளது என்றும், ஆனால், அவர் தன்னுடைய ஆவணங்களின் உரிமை சான்றின்படி உள்ள இடத்தில் தன்னுடைய மின் இணைப்பை பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தார். எதிர்மனுதாரரும், மேற்கண்ட மேல்முறையீட்டாளரின் வாதத்தை ஏற்றுக்கொண்டு, அவர் கொடுத்துள்ள ஆவணங்களின்படி அவர் மின் இணைப்பைப் பெற்று கொள்வதாக இருந்தால், அந்த ஆட்சேபணை நிலைக்காது என்று தெரிவித்தார்.

**12.11** மேற்கண்ட சூழ்நிலையில், மின்பாதையை விஸ்தரிப்பு செய்வதற்கு நீதி மன்ற வழக்கு எண் WP No. 12726/86 WP No.2544/89 (23/2/94) Court 318/97 (9.8.2000) தடையாய் உள்ளது என்பது தான் மிக முக்கியமான ஆட்சேபணை ஆகும்.
எதிர்மனுதாரார், மேல்முறையீட்டாளரின் விண்ணப்பங்களுக்கு, மதிப்பீடு அனுமதி அளிக்கும்வரை மேற்கண்ட தடை உள்ளது என்ற அறிவிப்பு பலகை அந்த இடத்தில்

வைக்கப்படவில்லை என்றும், பணிகளை, ஆரம்பிக்கலாம் என்ற பொழுது தான், அந்த பாதையில் மேற்கண்ட அறிவிப்பு இருந்தது என்றும் வாதிட்டார்.

**12.12** மேலும், மேற்கண்ட பாதையில், மின்பாதை அமைக்கக் கூடாது என்று ஏதேனும் ஆட்சேபனை கடிதம் (objection letter) பெறப்பட்டுள்ளதா என்பதற்கு இல்லை என்ற தெரிவித்தார்.

**12.13** மேல்முறையீட்டாளர், அங்கு ஏற்கனவே, தாழ்வழுத்த மின்பாதை செல்கிறது என்றும், அங்கு தடை உத்தரவு எதுவுமில்லை என்று வாதிட்டார்.

**12.14** எதிர்மனுதாரர், உதவி செயற்பொறியாளர், WP No. 127550/1986 & W.P.No.25440/1989 ஐ குறிப்பிட்டுள்ளதால் **23.2.1984** நாளிட்ட மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் ஆணையின் சம்மந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"5. Learned counsel for the petitioner states that even though he has asked for restoration of the lands after removal of the encroachement, he will be satisfied if adequate compensation is paid for the said encroachment by laying of pipelines in his lands. Taking note of this request made on behalf of the petitioner, I pass the third respondent is directed to fix the market value of the lands encroached upon, 97.6 M x 1M, at the current market rate by giving notice to the petitioner and giving a personal hearing to the petitioner. Such a hearing shall be fixed within six weeks from today The third respondent shall proceed to fix the compensation after the said hearing and pay the same to the petitioner within six weeks from the date of the hearing. If the petitioner is not satisfied about the compensation as fixed by the third respondent, it is open to the petitioner to make an appeal to the immediate superior of the third respondent or in a civil court I make it clear that if the third respondent does not comply with these directions, the Court will be constrained to take a serious view of the matter. The writ petition (W.P.12755 of 1986) is ordered in the above terms.*

*6. So far as W.P. No.2544 of 1989 is concerned, the corporation of Madurai has filed a counter affidavit stating that they are not using the property of the petitioner as a road. In this view of the matter, it is open to the petitioner to use his lands as a lawful owner, unless and until he is evicted in a manner*

*known to law. The writ petition (W.P.No.2544 of 1989) is ordered in the above terms."*

**12.15** மேற்கண்ட நீதிமன்ற உத்தரவுப்படி, மேற்கண்ட மனுதாரரின் நிலத்தை ரோடு ஆக மதுரை மாநகராட்சி பயன்படுத்தவில்லை என்று தெரிவித்துள்ளதால், மனுதாரர், அவர் அந்த இடத்தைவிட்டு சட்டரீதியாக காலி செய்யும் வரை மேற்கண்ட இடத்தின் சட்டப்படியான உரிமையாளராக பயன்படுத்திக்கொள்ளலாம் என்று உள்ளது. எனவே, திரு. சூரிய நாராயணன் அவர்கள் அந்த இடத்தை சட்டப்படியான உரிமையாளராக பயன்படுத்தி கொள்ளலாம் என்று தான் தீர்வாகி உள்ளது. எனவே, அங்கு மின்பாதை அமைக்க நீதிமன்ற தடையுத்தரவு உள்ளது என்பது சரியல்ல.

**12.16** எதிர்மனுதாரர், திரு.சூரியநாராயணன் அவர்கள் மின்பாதை அமைப்பதற்கு ஆட்சேபனையை தெரிவித்திருந்தால், அதனை தெரிவித்து, அந்த ஆட்சேபனை நிவர்த்தி செய்ய மேல்முறையீட்டாளரை கோரியிருக்கலாம். ஏனெனில், மேற்கண்ட நிகழ்வு நடந்த சமயத்தில் உள்ள தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27 (6) ன்படி, மின் பாதை அமைப்பதற்கு ஆட்சேபனையிருந்தால், அந்த ஆட்சேபனை நிவர்த்திக்க வேண்டியது விண்ணப்பதாரரின் கடமை என்று இருந்தது. (தற்போது மேற்கண்ட விதி இல்லை) ஆனால், திரு.சூரியநாராயணன் அவர்களின் ஆட்சேபனை கடிதம் இல்லாமல், மின்பாதை அமைக்க ஆட்சேபனை உள்ளது என்று தெரிவிப்பதும் சரியல்ல என்று நான் கருதுகிறேன். மேலும் 27(6) விதியை சுட்டிக்காட்டி மாற்றுப்பாதை அல்லது ஆட்சேபனை நிவர்த்திக்க வேண்டியது விண்ணப்பதாரரின் கடமை என்று அறிவிப்பு கொடுக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு அறிவிப்பு கொடுக்கப்படவில்லை.

**12.17** மேலும், இடத்தின் உரிமையைப் பற்றி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் என்று விண்ணப்பப் படிவத்தில் கூறப்பட்டுள்ள ஆவணங்கள் sale deed or propoerty / water / sewage tax receipt என்றுதான் உள்ளன. இந்த மேல்முறையீட்டாளர், sale deed copy மற்றும் மாநகராட்சி சொத்து வரி ரசீது நகல்களை சமர்ப்பித்துள்ளார். எனவே, மின் இணைப்பு கோரும் இடத்தின் வரைபடத்துடன் கூடிய வருவாய் ஆவணம் தரவில்லை என்பதால் விண்ணப்பம் தள்ளுபடி என்பதும் ஏற்புடையதாக இல்லை.

**12.18** உயர்நீதிமன்ற உத்தரவுபடி மின்பாதை அமைக்க தடையுத்தரவு உள்ளது என்றால், அதை நிவர்த்தி செய்ய, ஒரு வார கால அவகாசம் என்பது போதுமானது அல்ல. எனவே, விண்ணப்பதாரர், தனக்கு மேற்கண்ட கால அவகாசம் என்பது போதாது என்றும், அந்த காரணத்திற்காக தன்னுடைய விண்ணப்பத்தை தள்ளுபடி செய்ய கூடாது என்று தெரிவித்திருக்கலாம். ஆனால், மேல் முறையீட்டாளர் அவ்வாறு செய்யவில்லை. ஆனால், மேல்முறையீட்டாளர் கட்டிய மின் இணைப்பு வைப்பு தொகையை திருப்பித் தருமாறு அவருடைய **25.10.2013** நாளிட்ட கடிதத்தில் கோரியுள்ளார். எனவே, அவர் தன்னுடைய விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதை ஏற்றுக் கொள்கிறார் என்று ஆகிவிடுகிறது.

**12.19** மேலும், தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி **27(3)** கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"27. மின் ஆற்றல் வழங்கலுக்கான கேட்புகள்***

*xx xx xxx xxx*

*xx xx xxx xxx*

*xx xx xxx xxx*

***3)** உயர் அழுத்த மின்வழங்கலுக்கான விண்ணப்பம், படிவம் **4** இல் தரப்படவேண்டும். குடிசை மின்னிணைப்பு உள்ளிட்ட பிற தாழ் அழுத்த மின் வழங்கலுக்கான விண்ணப்பம் பின்னிணைப்பு – III இல் உள்ள படிவங்கள் **(1)** மற்றும் **(3)** இல் தரப்பட வேண்டும்.*

*குறிப்பு – மின் ஆற்றலை வழங்கிடக் கோரும் விண்ணப்பங்கள் முழுவதும் நிரப்பப்படாவிட்டாலும் அவை நேரடியாகவோ அல்லது அஞ்சல் வழியாகவோ எவ்விதத்தில் தரப்பட்டாலும் அவற்றைப் பெற்றதற்கான எழுத்துமூலமான ஒப்புதல் அறிக்கையைத் தரவேண்டும். அவை ஒழுங்காக அமைந்திருந்தால் அவற்றைப் பதிவு செய்து அவற்றைப் பெற்றமைக்கான ஒப்புதலையும் தரவேண்டும். அவை முழுமையாக நிரப்பப்படாமலிருந்தால் அதில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, அவற்றைப் பதிவு செய்யாமல் திருப்பி அனுப்பிவிட வேண்டும்."*

**12.20** மேற்கண்ட **27(3)**விதியின் கீழ் உள்ள குறிப்பின்படி மின் இணைப்பு கோரும் விண்ணப்பங்கள் சரியாக இருந்தால் தான் பதிவு செய்யப்படவேண்டும். அவ்வாறு இல்லையெனில், குறைகள் சுட்டிக்காட்டப்பட்டு அவற்றை பதிவு செய்யாமல் திரும்ப அனுப்பியிருக்க வேண்டும். இந்த மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்திலுள்ள குறைகள் என்று உதவி செயற்பொறியாளர் **19.3.2013** நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள காரணங்களில் நீதிமன்ற தடை உத்தரவு என்பதை தவிர மற்ற காரணங்கள் அனைத்தும் விண்ணப்பத்தின் பதிவிற்கு முன்பே சுட்டிக்காட்டப்பட்டு நிவர்த்தி செய்திருக்கப்படவேண்டும். மேலும், அந்நிலையில் வேறு கட்டணங்கள் எதையும் விண்ணப்பதாரர் செலுத்தியிருக்க மாட்டார் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

12.21 விண்ணப்பதாரர் எல்லா கட்டணங்களையும் செலுத்திய பின்பு தனக்கு மின் இணைப்பு வேண்டாம் என்று பின்வாங்கவில்லை என்பதாலும், உரிமம்தாரரின் தயார்நிலையை அறிவித்து அதன் பின்பும் கெடுகாலத்திற்குள் மின் இணைப்பை மேல்முறையீட்டாளர், வாங்கி கொள்ளவில்லை என்ற நிலை இல்லாததாலும், மேல்முறையீட்டாளர் செலுத்திய கட்டணங்களில் மின்னளவி பிணை வைப்புத்தொகையை தவிர மற்றவை தள்ளுபடி செய்யப்படும் என்ற மன்றத்தின் தீர்வு எனக்கு ஏற்புடையதாக இல்லை. எனவே, மேல்முறையீட்டாளர் செலுத்திய கட்டணங்களை விண்ணப்ப பதிவு தொகையை தவிர அவருக்கு திருப்பி தர வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 13. <u>முடிவுரை :</u>

13.1 இந்த மேல்முறையீட்டாளர் எல்லா கட்டணங்களையும் செலுத்திய பின்பு தனக்கு மின் இணைப்பு வேண்டாம் என்று பின்வாங்கவில்லை என்பதாலும், உரிமம்தாரரின் தயார்நிலையை அறிவித்து அதன் பின்பும் கெடுகாலத்திற்குள் மின் இணைப்பை மேல்முறையீட்டாளர், வாங்கி கொள்ளவில்லை என்ற நிலை இல்லாததாலும், மேல்முறையீட்டாளர் செலுத்திய கட்டணங்களில் மின்னளவி பிணைவைப்புத்தொகையைத் தவிர மற்ற கட்டணங்கள் தள்ளுபடி செய்யப்படும் என்ற மன்றத்தின் தீர்வு எனக்கு ஏற்புடையதாக இல்லை. எனவே, மேல்முறையீட்டாளர் செலுத்திய கட்டணங்களில் விண்ணப்ப பதிவு தொகையை தவிர மற்ற கட்டணங்களை, அவருக்கு திருப்பி தர வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

13.2 மேல்முறையீட்டாளர், தனக்கு மின் இணைப்பு பெறுவதற்கு புதிய விண்ணப்பங்கள் கொடுக்க தயாராக உள்ளேன் என்று தெரிவித்துள்ளதால், அவர் புதிய விண்ணப்பங்கள் சமர்ப்பித்தால் அந்த விண்ணப்பங்களுக்கு ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிகளின்படி ஆராய்ந்து மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

13.3 மேற்கண்ட ஆணையை நிறைவேற்றியது தொடர்பான அறிக்கையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

13.4 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.76/2014 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
1) திரு. சாகுல் ஹமீது
திருமதி. ஹமீதா,
5, சுப்பிரமணி நகர்,
2வது தெரு, வளசரவாக்கம்,
சென்னை – 87

2) உதவி செயற் பொறியாளர்/விநியோகம்,
அண்ணா நகர்,
மதுரை மின்பகிர்மான வட்டம்/பெருநகரம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மதுரை 20

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்)
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.புதூர், மதுரை

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – <u>**மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.